DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 125/2022 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW – 5 ஜமீலா பீ** |
| Father's Name | ஷெரீப் |
| Village | மேல்கலவாய் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 06/12/2024

**முதல் விசாரணை**

நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை யார் என்று எனக்கு தெரியாது. அ.சா.1 அ.சா.2 எனது மகன்கள், அ.சா.3 எனது மருமகள். அ.சா.4 எனது மருமகன். சுமார் 1 வருடத்திற்கு முன்பு எதிரிகள் பேசுவதற்காக அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களை அழைத்துசென்றனர். என் மகன்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்துசென்று தாக்கிவிட்டார்கள் இதில் எனது 2வது மகன் பேச்சு மூச்சு இல்லாமல் அங்கேயே விழுந்துவிட்டார். என் பெரிய மகன் வீட்டிற்கு வந்து அ.சா.3 அவரது மனைவியிடம் தகவல் சொல்லி அவர்கள் ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி நானும், எனது மருமகளும் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மேல்சிகிச்சைக்காக விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றோம். பெரிய பையனை 3 நாட்களுக்கு பிறகு வீட்டிற்கு அனுப்பிவிட்டனர், சிறிய மகன் 1 வாரம் மருத்துவமனையிலிருந்தார். என் பெரிய பையனை விசாரித்ததில் என் சிறிய மகனை இரும்பு ராடால் தாக்கிவிட்டார்கள் என கூறினார். பேச்சுவார்த்தைக்கு அழைத்துசென்ற அபுபக்கர், அமீபா, மற்றொருவர் பெயர் தெரியவில்லை அவர் ஆட்டோ ஓட்டுநர், மற்றொருவர் பெயர் ஞாபகமில்லை. எனது பெரிய மகனிற்கு அவர்கள் சொந்தகார பெண்ணை திருமணம் செய்துவைத்தோம்.

சம்பவம் சம்மந்தமாக செஞ்சி போலிசார் என்னை எதுவும் விசாரிக்கவில்லை. என் மகன்களை மட்டும் தான் விசாரணை செய்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

அமீர்பாஷா, பர்சானா இருவர் குடும்ப பிரச்சனை சம்மந்தமாக உங்கள் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். எனது 2வது மகன் அமீர்பாஷா முகநூலில் தேவையில்லாத செய்திகளை பதிவேற்றம் செய்ததால் பிரச்சனை வந்தது என்றால் சரிதான். இதுசம்மந்தமாக அ.சா.2ஐ எதிரிகள் கொடுத்த புகாரின் அடிப்படையில் போலிசார் விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். எனது இரண்டு மகன்களுக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து அவர்கள் சொன்னதின் மூலமாக தான் தெரியும் நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னை எதுவும் விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை. என் மகன்களுக்கு ஏற்பட்ட காயங்கள் எதிரிகளால் ஏற்பட்டது என்பது பொய் என்றாலும், உங்கள் மகன்கள் எதிரிகளை தாக்கவிட்டு தப்பித்து இருசக்கர வாகனத்தில் போகும்போது கீழேவிழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்துகொண்டு முன்விரோதம் காரணமாக கொடுக்கப்பட்ட பொய்யான வாக்குமூலத்தை வைத்துகொண்டு அவர்கள் உங்களுடைய மகன்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கறீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் மகன்களை எதிரிகள் எந்த பேச்சுவார்த்தைக்கும் அழைத்துசெல்லவில்லை என்றால் சரியல்ல.